[1972 மார்ச் 29]

திரு. கு. அ. பொம்மன் : தலைவர் அவர்களே, பரிசு சீட்டின் மூலம் கிடைக்கும் ஆதாயத்தை மருத்துவத் திட்டத்திற்கு ஒதுக்குவது என்கிற அடிப்படையில் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலுக்காவுக்கும், மற்றும் பந்தலூர், மசின்குடி போன்ற இடங்களுக்கும் மருத்துவ மனைக்காக 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படுமா ? அது குறித்த அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கம் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட ஒரு மருத்துவமனைக்கு மருத்துவமனைக் கட்டிடம், மருத்துவமனை விஸ்தரிப்பு ஆகியவற்றை இதில் சேர்க்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொதுவாகப் பந்தலூர், கூடலூர் வட்டம் போன்றவற்றில் முறையே 1956–ல் 1967–ல் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. மசின்குடியில் மருத்துவ மனை வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அது அரசின் ஆலோசனையில் இருக்கிறது.

*778 வினா திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறைந்த ஜனாதிபதி டாக்டர் ஜாகீர் உசேன் அவர்களால் வேலூரிலுள்ள (வட ஆர்க்காடு மாவட்டம்) தலைமை அரசினர் மருத்துவ மனையில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக ஏதாவது அடிக்கல் நாட்டப்பட்டதா ?

(இ) ஆமெனில், அது எப்போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறை இயக்குநரால் அனுப்பப்பட்ட திட்டம் அரசின் ஆய்விலுள்ளது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த அரசினர் மருத்துவமனையான பெட்லண்டு மருத்துவமனையில் கட்டிடம் கட்டுவதற்காக ஏறத்தாழ 1 லட்சம் அல்லது 2 லட்சம் ரூபாய் நிதி இருப்பதாக அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. மருத்துவமனை விரிவாக கட்ட வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு சுமார் 10—12 லட்சம் ரூபாய் ஆகும் என்பதால் உடனடியாக அந்த வேண்டுகோளை ஏற்று செயல்படுத்த முடியவில்லை. முதல் கட்டமாக முதல் இரண்டு மாடிகளைக் கட்ட $3\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவாகும் என்று கூறப்பட்டதால் அதற்கான திட்டத்தை நிறைவேற்ற இசைவு தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தக்க பதில் வந்தவுடன் அத் திட்டம் மேற்கொள்ளப்படும்.